**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **CC.No. 303/2019**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.1**

**Defence**
**Court**

**Name** **:** சிலம்பரசன்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873

on the day of **26.09.2022**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தேனி மாவட்டம், ராயப்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்த போது கடந்த 31.12.2018 அன்று காலை 11.00 மணிக்கு நானும், முதல்நிலை காவலர் 1870 முத்துக்குமரன், தலைமைக்காவலர் திரு.ராஜகுமரன், சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலையத்தில் இருந்த போது ரகசிய தகவலாளி மூலம் சார்பு

ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் போரில் சார்பு ஆய்வாளர் தலைமையில் நாங்கள் நால்வரும், ரகசிய தகவலாளியுடன் 11.15 மணிக்கு நிலையத்திலிருந்து புறப்பட்டு, கம்பம் 18 ம் கால்வாய், காட்டுப் பள்ளிவாசல், பகுதியில் 11.30 மணிக்கு கண்காணித்துக் கொண்டிருந்த போது வடக்கிருந்து தெற்காக KL 04 M 2925 என்ற ஹோண்டா இயர் காரை அடையாளம் காட்டி ரகசிய தகவலாளி ஒளிந்து கொள்ள நாங்கள் காரை வழிமறித்து காரில் வந்த நபரை எங்களை அறிமுகம் செய்து கொண்டு விசாரித்த போது அந்த காரில் தங்கராசு, ராகு ராஜேந்திரன், டிலேட் மேத்யு, பிச்சு பாபு, ஆகியோர் தங்கள் பெயர் மற்றும் முகவரியை கூறினார்கள். எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்கள் கஞ்சா கடத்தி வருவதாக எங்களுக்கு வந்த தகவலை கூறி கஞ்சா இருப்பதாக கூறி அதற்காக உங்களை சோதனை செய்ய வேண்டும்என்று உதவி ஆய்வாளர் கூறினார். மேலும் அவரிடம் நீதித்துறை நடுவரிடமோ, அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்னிலையிலே தங்களை சோதனை செய்யும்படி கூற உங்களுக்கு உரிமை உள்ளது என்று கூறி அவர்களிடம் விளக்கிய போது அவர்கள் வேறு எங்கும் செல்ல விரும்பவில்லை என்றும், தாங்கே சோதனை செய்து கொள்ளலாம் என்று கூறினார்கள். பின்னர் 12.00 மணிக்கு அவ்வாறு சோதனை பற்றி கூறப்பட்டது, 12.15 மணிக்கு சோதனை சம்மத கடிதம் எதிரிகளிடம் தனிதனியாக எழுதி பெற்றோம். அதில் நானும், என்னுடன் வந்த காவலரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். 2 வது எதிரி ராகுல்ராஜேந்திரன் என்பவர் காரின் பின் சீட்டிலிருந்து எடுத்து ஆஜர்படுத்திய வெள்ளை நிற பிளாஸ்டிக் ஹேரி பேக்கை ஆஜர் செய்ததை பிரித்து பார்த்த போது அதில் இலை, தலை, காய்களுடன் 2.200 கிலோகிராம் எடையுள்ள கஞ்சா என்னும் போதைப்பொருள் இருந்தது. அதிலிருந்து 50 கிராம் எடையுள்ள கஞ்சாவை மாதிரிக்கு எடுத்து காக்கிநிற கவரில் வைத்து, நூலால் கட்டி SHO சீல் வைத்தோம். அதில் சோதனை விவரங்கள் அடங்கி துண்டு தாளை ஒட்டி அதில் நானும், சாட்சிகளும் கையெழுத்திட்டோம். உதவி ஆய்வாளரும்

எதிரிகளும் கையெழுத்து செய்தார்கள். மீதமுள்ள கஞ்சாவை அதே காக்கிநிற கவரில் வைத்து துண்டு சீட் வைத்து அதிலும் நானும், சாட்சிகளும் கையெழுத்திட்டோம். உதவி ஆய்வாளரும் எதிரியும் கையெழுத்து செய்தார்கள். 13.30 மணிக்கு தனிநபர் சாட்சிகள் யாவரும் முன்வராததால் நாங்களே அத்தாட்சி தயார் செய்து அதில் சாட்சிகளாக நாங்கள் கையெழுத்து செய்தோம். 14.00 மணிக்கு அவர்களை கைது செய்து நிலையம் கொண்டு வந்தோம். பின்னர் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்வதற்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காருக்கும், பைக்கிற்கும் வித்தியாசம் தெரியும் என்றால், சரிதான். என்னை காவல் ஆய்வாளர் எதிரிகளிடம் விசாரித்த போது நாங்கள் எதிரியிடம் உம்மையும், பைக்கையும் சோதனையிட வேண்டும் என்று கேட்டதாக என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ளது என்றால், சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சோதனை சம்மத கடிதம் எதையும் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவற்றிற்கு ஆதரவாக ஆவணங்களை தயாரித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் கைப்பற்றுதல் மகஜருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் உதவி ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.